


**04.07.2024**

தலைப்புச் செய்திகள்

1. உலக கோப்பையை வென்ற இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுடன் பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் இன்று கலந்துரையாடி வாழ்த்து தெரிவித்தார்.

2. அக்னி வீரர்களின் நலனில் இந்திய ராணுவம் உறுதியுடன் இருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

3. நாடுமுழுவதும் 112 தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் வளர்ச்சியை உறுதி செய்யும் மத்திய அரசின் சம்பூர்ணதா அபியான் திட்ட பிரச்சாரம் இன்று தொடங்கி உள்ளது.

4. தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்டங்களின் பயனாளிகளுடன் திட்ட முன்னேற்றம் குறித்து முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டறிந்தார்.

5. கனடா ஓப்பன் பேட்மிட்டன் ஒற்யைர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் பிரியான்ஷு ரஜாவத், அனுபமா இன்று களமிறங்குகின்றனர்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி உலக கோப்பையை வென்ற இந்திய அணி வீரர்களை இன்று புதுதில்லி தமது இல்லத்தில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

முன்னதாக பார்படாஸில் இருந்து தனி விமானம் மூலம் புதுதில்லி வந்தடைந்த வீரர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 20-20 உலக கோப்பையை வென்ற இந்திய கிரிக்கெட் அணியினர் பிரதமரை சந்திக்க அவரது இல்லத்திற்கு சென்றபோது, பிரதமர் கிரிக்கெட் வீரர்களுடன் மகிழ்ச்சியுடன் கலந்துரையாடினார்.

மும்பையில் வாங்கடே விளையாட்டரங்கில் நடைபெறும் வெற்றி அணிவகுப்பில் பங்கேற்பதற்காக இந்திய அணியினர் புதுதில்லியிலிருந்து மும்பை புறப்பட்டு சென்றுள்ளனர்.

17 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியா 20-20 உலக கோப்பையை வென்றது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர் - விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தரின் 122-வது நினைவு தினத்தை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி அவருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்

சுவாமி விவேகானந்தரின் போதனைகள் கோடிக்கணக்கான மக்களுக்கு நம்பிக்கையையும், திறன்மேம்பாட்டையும், வழங்கி ஊக்கப்படுத்துவதாக தமது சமூக வலைதளப்பதிவில் கூறியிருக்கிறார்.

வளமான முன்னேற்றமடைந்த சமூகத்திற்கான விவேகானந்தரின் கனவை நனவாக்க அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றும் என்று பிரதமர் உறுதியளித்தார்.

❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் சீன வெளியுறவு அமைச்சர் வாங் - இ உடன் இரு நாடுகளுக்கு இடையிலான எல்லை பிரச்சனைகள் குறித்து இன்று விவாதித்தார்.

கஸகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டின் ஒருபகுதியாக நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் இப்பிரச்சனைக்கு அரசியல் மற்றும் ராணுவ தரப்பு மூலம் தீர்வுகாண இருதரப்புகளும் ஒத்துக்கொண்டன.

எல்லை கட்டுப்பாட்டு கோட்டிற்கு உரிய மதிப்பளிப்பதோடு எல்லை பகுதியில் அமைதியை நிலைநாட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

பரஸ்பர புரிந்துணர்வு, பரஸ்பர மரியாதை, பரஸ்பர நலன் சார்ந்த பேச்சுவார்த்தைகள் இருநாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த வழிகோலும் என்றும் அமைச்சர் ஜெய்சங்கர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

அக்னி வீரர்களின் நலனில் இந்திய ராணுவம் உறுதியுடன் இருப்பதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

வீர மரணமடைந்த அக்னி வீரர்களுக்கான ஊதிய நிலுவைத்தொகை, இழப்பீட்டு தொகை உள்ளிட்டவை அவர்தம் குடும்பத்தினருக்கு விரைந்து வழங்கப்படுவதாக எடுத்துரைத்தார்.

அக்னிவீரர் அஜய்குமாரின் தன்னிகரற்ற தியாகத்தை இந்திய ராணுவம் போற்றுவதாகவும், உரிய இராணுவ மரியாதையுடன் அன்னாரின் இறுதிச்சடங்கு நடைபெற்றதாகவும் கூறியுள்ளார்.

இதனிடையே திரு. ராஜ்நாத் சிங், ஆஸ்திரேலிய துணை பிரதமரும், பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் இந்திய பசிபிக் பிராந்தியத்தில் இரு நாடுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு குறித்த பேச்சு வார்த்தைகளையும் மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖

சம்பூர்ணதா அபியான்

மத்திய அரசின் சம்பூர்ணதா அபியான் திட்ட விழிப்புணர்வு பிரச்சாரம் இன்று தொடங்கியது

வரும் செப்டம்பர் 30-ம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த இயக்கத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் தாலுக்காக்களின் மேம்பாட்டு பணிகளை முன்னெடுத்து செல்வதை இலக்காக கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நாட்டின் 112 மாவட்டங்களிலும், 500 தாலுக்காக்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலை ஒன்றியத்தில் இத்திட்டம் இன்று தொடங்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். .. வாய்ஸ் ..

திருச்சி மாவட்டம் துறையூர், நீலகிரி மாவட்டம் கோத்தகிரி, தென்காசி மாவட்டம் மேல நீலிதன், நெல்லை மாவட்டம் நாங்குநேரி பகுதிகளிலும் இன்று சம்பூர்ணதா அபியான் இயக்கம் தொடங்கப்பட்டு உள்ளது.

ராமநாதபுரம் திருவாடானை, விருதுநகர் மாவட்டம் திருச்சுழி, விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணை நல்லூர், வேலூர் கே.வி.குப்பம் பகுதிகளில் நாளை இந்த இயக்கம் தொடங்கப்படுகிறது.

இந்த வட்டங்களில் மத்திய அரசின் திட்டங்களை முன்னெடுத்து சென்று வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளை உறுதி செய்ய இந்த திட்டம் வகை செய்கிறது.

❖❖❖❖❖❖❖❖

ஸ்மார்ட் சிட்டி

நாடுமுழுவதும் 100 நகரங்களில் பொலிவுறு நகரம் திட்டத்தின் கீழ் 90 சதவிகித பணிகள் நிறைவடைந்து உள்ளதாக மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மீதமுள்ள பணிகளை அடுத்த ஆண்டு மார்ச் 31-ம் தேதிக்குள் முடிக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளதகாவும் அமைச்சகம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் நீங்கள் நலமா! திட்ட பயனாளிகளை காணொலி மூலம் இன்று தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துக்கள் மற்றும் அரசுநலத்திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார்.

அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற்ற பயனாளிகள் நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களையும், அதன் பின்னூட்டங்களையும் முதலமைச்சரிடம் தெரிவித்தனர்.

இதனிடையே ஊரக பகுதிக்கான மக்களுடன் முதல்வர் திட்டத்தை முதலமைச்சர், தர்மபுரியில் வரும் 11-ம் தேதி தொடங்கிவைக்கிறார்.

இந்நிகழ்ச்சி நடைபெறும் வளாகத்தை இன்று ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய மாநில வேளாண்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் முதலமைச்சர் 2 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கவுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

அண்ணாமலை

நீட் நுழைவுத் தேர்விற்கு எதிராக 3 முறை சட்டப்பேரவையில் தீர்மானத்தை கொண்டுவந்துள்ள திமுக அரசு, இதுவரை ஏன் ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிடவில்லை என்று பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், விக்ரவாண்டி இடைத்தேர்தலில் திமுக வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அஇஅதிமுக தேர்லில் போட்டியிடவில்லை என்று குற்றம் சாட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

விக்ரவாண்டி

விழுப்புரம் மாவட்டம் விக்ரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் வரும் 10-ம் தேதி நடைபெறுவதை ஒட்டி அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே வாக்குப்பதிவு நிறைவடையும் 48 மணி நேரத்திற்கு முன்பாக எந்த கருத்துக் கணிப்புகளையும் பிற வாக்குப்பதிவு ஆய்வு முடிவுகளையும் வெளியிடக் கூடாது என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

பிரிட்டன் தேர்தல்

பிரிட்டனில் புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கான நாடாளுமன்ற தேர்தல் தற்போது முழுவீச்சில் நடைபெற்று வருகிறது

இந்திய நேரப்படி இன்று பிற்பகல் பன்னிரெண்டரை மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு நாளை அதிகாலை மூன்றரை மணிவரை நடைபெறும்.

இத்தேர்தலில் தற்போதைய பிரதமர் ரிஷி சுனக்கின் கன்சர்வேடிவ் கட்சியும், எதிர்கட்சியான தொழிலாளர் கட்சியும் களத்தில் உள்ளன.

❖❖❖❖❖❖❖❖

கோவை

கோவை மாவட்டத்தில் மெட்ரோ ரயில் இயக்குவதற்கான வழித்தடத்தில் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி அதிகாரிகள் இன்று ஆய்வுசெய்தனர்

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மேம்படுத்தப்பட்ட கண் சிகிச்சை பிரிவை மருத்துவமனை முதல்வர் டாக்டர் சிவகுமார் இன்று திறந்துவைத்தார்.

நவீன கண்புரை அறுவை சிகிச்சை மட்டுமல்லாது, லேசர் சிகிச்சைகளும் இங்கு மேற்கொள்ளப்பட உள்ளன.

திருப்பூர் தாராபுரம் உடுமலையில் இயங்கி வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணாக்கர் நேரடி சேர்க்கை நடைபெற்று வருவதாக திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கிருஸ்துராஜ் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் நடப்பாண்டு தமிழக அரசின் பெண் சாதனையாளர் விருதுபெற தகுதியுடையவர்கள் வரும் 8-ம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாய விலைக்கடைகளிலும் ஜுன் மாதத்திற்கான துவரம் பருப்பு, பாமாயில் பெறாதவர்கள் இம்மாதம் முழுவதும் அவற்றை பெற்றுக்கொள்ளலாம் என ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் குழந்தை தொழிலாளர்களை பணியமர்த்தும் கடைகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பாக பொதுமக்கள் இலவச தொலைபேசி மூலம் புகார் தெரிவிக்கலாம் என ஆட்சி தலைவர் திருமதி. ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்

இம்மாவட்டத்தில் அரசு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதற்காக இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அரசு பழங்குடியின உண்டு உறைவிட பள்ளிகளில் இடைநிலை பட்டதாரி ஆசிரியர் உட்பட 119 காலிபணியிடங்களுக்கு வரும் 10-ம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு அனுமதித்துள்ள ஏரி குளங்களிலிருந்து விவசாயிகள் இலவச மண் எடுக்க அந்தந்த வட்டாட்சியர்களிடம் அனுமதி பெற வேண்டும் என ஆட்சித்தலைவர் திருமதி. கற்பகம் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் நீர் நிலைகளில் விவசாயிகள் இலவச மண் எடுக்க இணையதளத்தில் விண்ணப்பித்து பயன்பெறலாம்

ஆன்லைன் மோசடி மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் காவல் துறையினர் பங்கேற்ற குறும்பட போட்டியில் சேலம் மாநகர காவல்துறையினர் முதலிடம் பிடித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

வானிலை

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

பரவலாக தமிழ்நாட்டில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழை பெய்ய கூடும் என்றும் இம்மையம் தெரிவித்துள்ளது

மன்னார் வளைகுடா, தென்தமிழக கடலோரம், வங்கக்கடல், அரபிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் அடுத்த 4 நாட்களுக்கு மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

கனடா ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்யைர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் பிரியான்ஷு ரஜாவத் - ஜப்பானின் ஒபாயா ஷியை இன்று எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அனுபமா உபாத்யாயா - கனடாவின் மிஷ்ஷெலுடன் மோதுகிறார்.

ஆடவர் இரட்யைர் பிரிவில் இந்தியாவின் சாய்பிரதீக் - கிருஷ்ணபிரசாத் காரகா இணையும்,

மகளிர் இரட்டையர் பிரிவில் ட்ரீசா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணையும் இன்று களமிறங்குகிறது.

❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

லண்டனில் நடைபெறும் விம்பிள்டன் கிரான்ஸ்லாம் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் 2-வது சுற்றில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா - ஆஸ்திரேலியாவின் எப்டன் இணை நாளை ஜெர்மனி இணையுடன் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖